பக்கங்கள்:-22

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | மாசி 21 | புதன்கிழமை | 05.03.2025 | அதிர்வு 213

**வைத்தியர்கள் முன்னெடுக்கவிருந்த**

## வேலைநிறுத்தப் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தம்




அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் முன்னெடுக்கவிருந்த வேலைநிறுத்தப் போராட்டம் 07▶

## மட்டக்களப்பில் தலைதூக்கும் வன்முறைச் சம்பவங்கள் உடன் முடிவு கட்டுமாறு அரசிடம் சாணக்கியன் கோரிக்கை

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதாளக் குழுக்களால் குழப்பங்கள் ஏற்படலாம் என்று ஜனாதிபதி அண்மையில் நாடாளுமன்றத்தில் கூறியிருந்த நிலையில் அவர் கூறியது போன்றே அங்கு சம்பவங்கள் நடக்கின்றன என்றும், இது தொடர்பில் அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்நேற்றுசெவ்வாய்க் கிழமை ஒழுங்குப் பிரச்சினையை முன் வைத்தே சாணக்கியன் எம்.பி இவ்வாறு கூறினார். 06▶



# தமிழர்களை அநுர அரசும் ஏமாற்றுகின்றது




CLICK HERE VIDEO

### வடமராட்சியில் ஜோசப் ஸ்டாலின் குற்றச்சாட்டு

(எஸ்.ரகுதீஸ்)

தமிழ் மக்களின் அரசியல் தீர்வு உள்ளிட்ட விவகாரங்களில் கடந்த கால அரசுகளைப் போன்று அநுர அரசும் ஏமாற்றும் வகையிலேயே செயற்பட்டு வருகின்றது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குற்றஞ்சாட்டினார். 06▶

## இஷாரா செவ்வந்தியை காட்டிக்கொடுப்பவருக்கு பரிசுத் தொகை அதிகரிப்பு



பாதாள உலகக் குழுவின் தலைவர் கனேமுல்ல சஞ்சீவவைக் கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்குள் வைத்து சுட்டுப் படுகொலை 07▶

**கல்முனை வடக்கு உப செயலக விவகாரம்:**

## தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குத் தீர்வு வேண்டும்

### சபையில் அரசிடம் கோடீஸ்வரன் எம்.பி. வலியுறுத்து

"கல்முனை வடக்கு உப செயலகத்தைப் பிரதேச செயலகமாகத் தரமுயர்த்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும் இன்றுவரை அது தரமுயர்த்தப்படாமை, அதற்கான அதிகாரங்கள் வழங்கப்படாமை தொடர்பில் தேசிய மக்கள் சக்தி அரசு விசேட குழு ஒன்றை அமைத்து விசாரணை செய்து எமக்கான நீதியை வழங்க வேண்டும்." 06▶






ஐக்கிய தேசியக் கட்சியை ஆங்கிலத்தில் UNP என்று சொல்லுவர். இந்த UNP என்பதை ஆங்கிலத்தில் Uncle Nephew Party என்று (மாமன் – மருமகன் கட்சி என்று) நையாண்டியாகக் கூறுவது வழமை. அது ஒரு வகையில் உண்மையும் கூட.

1970 களிலிருந்து எண்பதுகளின் பிற்பகுதி வரை அதன் தலைமைத்துவத்தை மாமனார் ஜே.ஆர். ஜெயவர்த்தன வைத்திருந்தார். 1995 இல் இருந்து இப்போது வரை 30 ஆண்டுகாலம் அதன் தலைமைத்துவம் ஜே.ஆரின் மருமகன் ரணில் விக்கிரமசிங்கவின் கைகளில் இருக்கின்றது. சுமார் ஐம்பது வருடங்கள் மாமன் – மருமகன் கைகளில் அதன் தலைமைத்துவம் இருப்பதால் அதை 'மாமன் – மருமகன் கட்சி' என்று சொல்வதில் தவறில்லைத்தான்!

கடந்த 30 ஆண்டுகளாக அதன் தலைமைத்துவத்தை கையில் வைத்திருக்கும் ரணில் விக்கிரமசிங்க கடந்த வருட இறுதியில் சத்தம் சந்தடியின்றி செய்து கொண்ட கட்சியின் யாப்புத் திருத்தம் மூலம் மேலும் 6 வருடங்களுக்குத் 06▶



# விமானப்படை புதிய பணிக்குழாம் பிரதானியாக எயார் வைஸ் மார்ஷல் லசித சுமனவீர நியமனம்

இலங்கை விமானப்படையின் புதிய பணிக்குழாம் பிரதானியாக எயார் வைஸ் மார்ஷல் லசித சுமனவீர நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் வழங்கப்பட்ட இந்த நியமனம் நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அமைந்துள்ளது.


மினுவங்கொடை ஜனாதிபதி கல்லூரியின் பழைய மாணவரான எயார் வைஸ் மார்ஷல் லசித சுமனவீர 1991 ஆம் ஆண்டு இலங்கை விமானப்படையில் பொதுப்பணி கடமை விமானி பிரிவில் கெடட் அதிகாரியாக இணைந்துள்ளார்.

4 ஆம் இலக்க ஹெலிகொப்டர் படைப்பிரிவின் விமானியாக தமது சேவையை ஆரம்பித்த அவர் இலக்கம் 04 மற்றும் 07 ஹெலிகொப்டர் படைப் பிரிவுகளில் கட்டளை அதிகாரியாகவும் பணியாற்றியுள்ளார்.

அனுராதபுரத்திலுள்ள இலங்கை விமானப்படை வடக்கு விமான கட்டளை தலைமையகத்தில் வடக்கு விமானத் தளபதியாக பணியாற்றியுள்ளதுடன் 2 போர் விமானப் படைகள் உள்ளிட்ட 29 சுயாதீன குழுக்களின் தாயகமாக காணப்படும் இலங்கை விமானப்படை கட்டுநாயக்க முகாமின் கட்டளை அதிகாரியாகவும் செயற்பட்டுள்ளார்.

ரண விக்ரம, ரண சூர பதக்கங்களும் சிறந்த சேவை விருதையும் எயார் வைஸ் மார்ஷல் லசித சுமனவீர பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தபால்மூல வாக்களிப்பு விண்ணப்பம் 12 நள்ளிரவு வரை ஏற்றுக்கொள்ளப்படும்




உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தபால்மூல வாக்களிப்புக்கு தகுதிபெற்றவர்களின் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் எதிர்வரும் 12 ஆம் திகதி நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடையுமென தேசிய தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை எதிர்வரும் 12 ஆம் திகதிக்குள் மாவட்ட தேர்தல் அலுவலகங்களில் சமர்ப்பிக்க வேண்டும் என ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

தபால் மூலம் வாக்களிக்கத் தகுதியானவர்களின் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் காலம் நீட்டிக்கப்பட மாட்டாது எனவும் ஆணைக்குழுவின் அறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் வாக்குமூலம் வழங்கினர் எரிபொருள் விநியோகத்தர் சங்கத்தினர்



எரிபொருள் விநியோகத்தர்கள் சங்கத்தின் துணைத் தலைவர் குசும் சந்தநாயக்க மற்றும் சாந்த சில்வா உள்ளிட்ட பணிப்பாளர்கள் குழு நேற்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகியிருந்தது.

சுமார் 5 மணிநேரம் வாக்குமூலம் வழங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

அரசாங்கத்தை அவமானப்படுத்தும் நோக்கிலும் சிரமப்படுத்தும் நோக்கிலும் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை சீர்குலைக்க முயற்சிப்பதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பில் வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்காக மேற்படி தரப்பினர் நேற்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.







# கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரத்திற்கு உடனடி தீர்வு வேண்டும்: கஜேந்திரகுமார் எம்.பி

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பில் தற்போது நிலவும் பிரச்சினைக்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் வலியுறுத்தினார்.

இந்த விடயத்தில் அரசாங்கம் முன்னெடுக்கும் உரிய நடவடிக்கைகளுக்குத் தாம் ஆதரவு வழங்கத் தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார்.

நேற்றைய நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அரசியல் தலையீடுகள் இன்றி இந்த பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் முழுமையாக செயற்பட முடியாத நிலையில் உள்ளதாகவும் கஜேந்திர குமார் பொன்னம்பலம் சுட்டிக்காட்டினார்.

# தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் பெருந்தோட்ட மக்களை ஏமாற்றியுள்ளது

## சாணக்கியன் எம்.பி குற்றச்சாட்டு




பெருந்தொட்ட தொழிலாளர்களுக்கான சம்பள விடயத்தில் ஆட்சியமைப்பதற்கு முன்னர் ஒரு கருத்தையும் ஆட்சி அமைத்ததன் பின்னர் மற்றுமொரு கருத்தையும் தற்போதைய அரசாங்கம் முன்வைப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

தேர்தலை இலக்காகக் கொண்டு செயற்படும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் பெருந்தோட்ட மக்களை ஏமாற்றியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

அதேநேரம், நாடாளுமன்றில் கருத்துரைத்த நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஸ்ணன், சம்பள விடயத்தில் பெருந்தோட்ட தொழிலாளர்கள் பாரிய சவால்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்தார்.

கடந்த அரசாங்கங்களைப் போன்று தற்போதைய அரசாங்கமும் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வேதன விடயத்தில் சிபாரிசு மாத்திரமே முன்வைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், அண்மையில் நானுஓயாவில் கருத்துரைத்த பெருந்தோட்ட நிறுவனங்களின் சம்மேளனத்தினது பேச்சாளர் ரொஷான் இராஜரை, இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் தங்களுடன் கலந்துரையாடவில்லை எனக் குறிப்பிட்டார் என நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் சுட்டிக்காட்டினார்.




# ‘வளமான நாடு - அழகான வாழ்க்கை’ தேசிய கொள்கை கட்டமைப்பாக ஏற்றுக்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம்

“வளமான நாடு – அழகான வாழ்க்கை“ கொள்கைப் பிரகடனத்தை தேசிய கொள்கை கட்டமைப்பாக ஏற்றுக்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

பலம்பொருந்திய உற்பத்திப் பொருளாதாரத்தின் மூலம் 2030 ஆம் ஆண்டாகும் போது 120 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மொத்தத் தேசிய உற்பத்தி இலக்குடன் கூடியதாக நிலைதளராத பொருளாதார விருத்தி மற்றும் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு “வளமான நாடு – அழகான வாழ்க்கை” கொள்கைப் பிரகடனம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இது பொருளாதார, சமூக, சுற்றாடல் மற்றும் அரசியல் உள்ளிட்ட அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய வகையில் கீழ் குறிப்பிட்ட பிரதான 04 துறைகளின் கீழ் தொகுக்கப்பட்டுள்ளது.

- எளிமையான வாழ்க்கை – ஆரோக்கியமான நாடு
- கண்ணியமான வாழ்க்கை – பாதுகாப்பான நாடு
- நவீனமான வாழ்க்கை – வளமான நாடு
- நன்மதிப்பான வாழ்க்கை – நிலைதளராத நாடு

ஆகிய 04 துறைகளின் கீழ் 40 உப துறைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அந்தந்தத் துறைகளுக்குரிய கொள்கைக் கோட்பாடுகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் வெவ்வேறாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

“வளமான நாடு – அழகான வாழ்க்கை“ கொள்கைப் பிரகடனத்தை அரசின் தேசிய கொள்கைப் பணிச்சட்டகமாக ஏற்றுக்கொள்வதற்கும் அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரச நிறுவனங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் தத்தமது பணிகளுக்கமைய திட்டமிட்டு நடைமுறைப்படுத்தவும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

# வடக்கில் நிர்மாணப் பணிகள் ஊடாக இனவாதம் தலைதூக்க இடமளியோம்

## நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு




வட மாகாணத்தில் ஏதாவது ஒரு காணியை விடுவிப்பதன் ஊடாகவோ, அல்லது ஏதாவது ஒரு காணியில் நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதன் ஊடாகவோ நாட்டில் மீண்டும் இனவாதமும் மதவாதமும் தலைதூக்குவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் தையிட்டி விகாரை காணி தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, அந்த பகுதியில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் அந்த மக்களின் காணியை விடுவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமெனக் குறிப்பிட்டார். அவர் தெரிவிக்கையில்,

“அந்த பணிகள் முறையாக இடம்பெறும்.

அதே போன்று அங்கு ஏதாவது ஒரு காணியை விடுவிப்பதன் ஊடாகவோ, அல்லது ஏதாவது ஒரு காணியில் நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதன் ஊடாகவோ நாட்டில் மீண்டும் இனவாதமும் மதவாதமும் தலைதூக்குவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

இனங்களுக்கு இடையே சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கே அரசாங்கத்துக்குப் பெரும்பான்மையான மக்கள் ஆணை கிடைத்துள்ளது.

இதனடிப்படையிலேயே இந்த முறை பாதீட்டில் அதிக தொகை வடக்குக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் விசேட கவனமும் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, மீண்டும் மதவாதத்தையும் இனவாதத்தையும் உருவாக்க இடமளிக்காமல் அனைவரும் இலங்கையர்கள் என்ற வகையில் செயற்படுவதே எமது இலக்காகும்.

இதனடிப்படையிலேயே, இலங்கையர் தினமொன்றை எதிர்வரும் ஒக்டோபர் அல்லது நவம்பரில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே, நாட்டின் அமைதிக்கு இடையூறு ஏற்படுத்தும் எந்த தரப்பினருக்கும் அரசாங்கம் பதிலளிக்கும்.”– என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தனது தலைமைத்துவத்தை உறுதிப்படுத்தி இருக்கிறார் எனக் கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன.

தமிழர்கள் தரப்பிலும் பெரும்பாலான கட்சிகளுக்கு நிரந்தர – ஆயுள்கால – தலைவர்கள்தான். அதே பாணியையே ரணில் முன்னெடுத்திருக்கின்றார். 30 ஆண்டுகள் கட்சித் தலைமையை வைத்திருக்கும் அவர் இன்னும் எத்தனை வருடங்கள் அதனை தொடர போகின்றாரோ ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.....!

+ + +

ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணியின் தலைவர் ஒருவரோடு பேசிக் கொண்டிருந்தேன். நேற்றுக் காலை முரசில் வெளியான ஒரு செய்தி குறித்து அவர் விசாரித்தார்.

'ஒட்டுக் குழுக்களோடு இணைவதன் மூலம் தமிழ்த் தேசியத்தை விட்டுக் கொடுக்கும் வேலையைச் செய்யோம் என்கிறார் சரா; தேசியத்தின் பாதையில் தனித்துவமாகத் தங்கள் அரசியல் பயணம் தொடருமாம்' என்ற தலைப்பில் வெளியான செய்தி பற்றிய அவர் கேட்டார்.

முன்னாள் எம்.பி. சரவணபவனின் அலுவலக அஞ்சல் முகவரி என்ற பெயரில் முரசு செய்திப் பிரிவுக்கு அனுப்பப்பட்ட செய்தியையே பிரசுரித்தோம் என்று அவரிடம் கூறினேன்.

வெளிநாட்டில் இருக்கும் சரவணபவனுடன் தாம் இன்று (நேற்று) உரையாடினார் என்று அந்தத் தலைவர் சொன்னார். தாம் வெளிநாட்டில் இருக்கும் எந்த ஊடகத்துக்கும் அத்தகைய பேட்டியையோ, கருத்தையோ, செய்தியையோ கொடுக்கவில்லை என்றும், சில வெளிநாட்டு ஊடகங்கள் திட்டமிட்டு அத்தகைய செய்திகளைப் பரப்பி இருக்கின்றன என்றும் தன்னிடம் சரவணபவன் கூறினார் எனவும் அந்தத் தலைவர் சொன்னார்.

ஆயினும் அத்தகைய மறுப்பு எதுவும் சரவணபவன் தரப்பிலிருந்து எங்கள் பத்திரிகைக்குக் கிடைக்கவில்லை என்று நான் குறிப்பிட்டேன்.

அத்தகைய மறுப்பு எதையும் தாம் வெளியிடுவார் என்று சரவணபவன் தம்மிடம் தெரிவிக்கவில்லை என்றும், ஆயினும் ஐக்கியப்பட்டு ஒரு கூட்டை உருவாக்க ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி எடுக்கும் முயற்சிகளுக்குத் தமது ஆதரவு தொடர்ந்து இருக்கும் என்று சரவணபவன் தமிடம் தெரிவித்தார் என்றும் அந்தத் தலைவர் குறிப்பிட்டார்.

வாசகர்களின் கவனத்திற்காக இந்தத் தகவல்...!

+ + +

பாடசாலைகள் பலவற்றுக்கும் தமது 'பிரபஞ்சம்' திட்டம் மூலம் பல மில்லியன் ரூபா செலவில் பஸ்கள் வழங்குவது, திறன் வகுப்பறை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது, கம்பியூட்டர் வசதிகளை வழங்குவது போன்ற நிகழ்வுகளை செய்து வந்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ இப்போது அவற்றை நிறுத்திக் கொண்டு விட்டார். பாடசாலைகளில் எதிர்க்கட்சியினர் அரசியல் செய்ய இடம் அளிப்பதில்லை என்ற அரசின் திட்டத்தின் பெயரில் இந்த நன்நடவடிக்கைக்கு கதவடைப்பு செய்யப்பட்டுள்ளது. ஆனால் பாடசாலைகளின் நிகழ்ச்சிகளுக்கும், விளையாட்டுப் போட்டிகளுக்கும் ஆளுங் கட்சி அமைச்சர்களும் பிரமுகர்களும் பிரதம விருந்தினர்களாக பங்குபற்றி அரசியல் செய்யும் சின்னத்தனம் மட்டும் இப்போதும் கல்விப் புலத்தில் தாராளமாகத் தொடர்கிறது. எதிர்க்கட்சியினரின் பயனுள்ள நடவடிக்கைகளுக்கு ஆப்படித்து விட்டு, ஆளும்தரப்பு தனது அரசியலைக் கொண்டு நடத்துகிறது. அதிகாரம் கைகளுக்கு வந்தால் இத்தகைய சின்னத்தனம் தாராளமாகிவிடும்...!

---

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த பெப்ரவரி 20ஆம் திகதி ஆரையம்பதியில் வாள்வெட்டு சம்பவமொன்று நடந்தது. சம்பந்தப்பட்டவர்கள் இன்னும் கைதாகவில்லை என்று மக்கள் போராட்டம் நடத்தினர். அதனைத் தொடர்ந்து நேற்று (நேற்றுமுன்தினம்) மட்டக்களப்பு – கல்லடியில் வாள்வெட்டுக் குழுவால் கத்திவெட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி அண்மையில் நாடாளுமன்றத்தில் வரவு – செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றும்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதாள குழுக்களால் சில குழப்பங்கள் ஏற்படலாம் என்று கூறியிருந்த நிலையில் தற்போது நேற்று (நேற்று முன்தினம்) இரவு நேரத்தில் கல்லடியில் குற்றச் செயல் நடந்துள்ளது. அதேபோன்றுதான் ஒரு வாரத்துக்கு முன்னர் ஆரையம்பதியில் நடந்துள்ளது.

இது தொடர்பில் அரசு அவசரமாக கரிசனை எடுத்து இதற்கு முடிவு காண வேண்டும்." – என்றார்.

---

## தமிழர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
யாழ். வடமராட்சிக்கு நேற்று செவ்வாய்க்கிழமை விஜயம் மேற்கொண்ட ஜோசப் ஸ்டாலின், யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழ் மக்களுக்கு அரசியல் அதிகாரம் வழங்குவது, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், காணி விடுவிப்பு உள்ளிட்ட தமிழர் விவகாரங்களில் புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் அநுர அரசும் ஏமாற்றும் விதத்திலேயே செயற்பட்டு வருகின்றது.

ஜெனிவா விவகாரம் மற்றும் வரவு – செலவு திட்டம் ஆகியவற்றில் இந்த விடயங்கள் குறித்து அதிகமாகப் பேசுகின்ற அளவுக்கு நடைமுறையில் செயற்படுத்துவதில் இந்த அரசு அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா ஆகியோரின் அண்மைக்கால பேச்சுகள் இதனையே உறுதிப்படுத்துகின்றன.

இதேவேளை, அரசியல் தேவைகளுக்காக மீனவர் பிரச்சினையைக் கையிலெடுக்காது கடல் வளத்தையும் மீனவர்களது வாழ்வாதாரத்தையும் கருத்தில் கொண்டு இரு நாட்டு அரசுகளும் சாத்தியமான வழிமுறைகளில் தீர்வு காண முன்வரவேண்டும்.

நாட்டில் அண்மையில் இடம்பெற்று வரும் நிகழ்வுகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் அரச தரப்பு பிரதிநிதிகள் அவ்வாறான நிகழ்வுகளால் தேசிய பாதுகாப்புக்கு எவ்வித பாதிப்புக்களும் இல்லை எனத் தெரிவித்து வருகின்றனர். ஆனால், பொலிஸ்மா அதிபர் ஒருவரையே தேடும் நிலையில் பொலிஸ் உள்ளது. இவ்வாறான கேவலமான நிலையில்தான் நாடு தற்போது உள்ளது." – என்றார்.

## தமிழருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டத்தில் பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சு மீதான் குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்திய அவர், மேலும் பேசுகையில்,

"33 வருடங்களாக அநீதி இழைக்கப்பட்ட ஒன்றுக்காக நாங்கள் பல தடவைகள் இந்த உயரிய சபையில் பேசியிருக்கின்றோம். இந்த அரசின் இதுவரையான ஆட்சியிலும் 3 தடவைகள் பேசியுள்ளேன். கல்முனை வடக்கு பிரதேச செயலகம் சம்பந்தமாக, இந்தப் பிரதேச செயலகத்துக்கு இழைக்கப்பட்ட அநீதி சம்பந்தமாக மீண்டும் பேசுகின்றேன்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் சம்பந்தமாக நான் வாய்மூல விடைக்கான நேரத்தில் கேள்விகளை முன்வைத்திருந்தேன். அதற்குப் பதிலளித்த பிரதி அமைச்சர் அடுத்த அமர்வில் பதில் வழங்குவேன் என்று கூறியிருந்தார். ஆனால், இன்று வரை பதில் தரவில்லை.

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் என்பது 1989 ஆம் ஆண்டு உப பிரதேச செயலகமாக இருந்தது. அதன் பின்னர் 1993 ஆம் ஆண்டு உப குழுவின் அறிக்கை மூலம் 1993.09-28 ஆம் திகதி அமைச்சரவையின் அனுமதியோடு அது முழு அதிகாரம் கொண்ட பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தப்பட்டது.

அமைச்சரவை அனுமதி பெற்றும் கூட இன்றும் அந்தப் பிரதேச செயலகத்துக்குரிய அதிகாரம் மறுக்கப்பட்டுள்ளது.

33 வருடங்களாக ஆட்சியில் இருந்த அரசியல்வாதிகளும் உயர் அதிகாரத்தில் இருந்த செயலாளர் மற்றும் அரச அதிபர்கள் போன்றவர்கள் அரசியல்வாதிகளின் நோக்கத்தை அடைவதற்காக அவர்களின் கைக்கூலிகளாக இருந்து அந்தத் தரமுயர்த்தப்பட்ட பிரதேச செயலகத்துக்குக் கொடுக்கப்பட வேண்டிய அதிகாரத்தைக் கொடுக்காமல் இருந்தார்கள்.

இன்று 323 ஆளணியினர் வரை கொண்ட அந்தப் பிரதேச செயலகம் 29 கிராம சேவகர் பிரிவுகளையும் கொண்டது. இது முழு வளங்களும் கொண்ட பிரதேச செயலகம்.

ஆனால், 2019ஆம் ஆண்டு அது பிரதேச செயலகமாக வீடமைப்பு அமைச்சின் அதிகாரபூர்வ இணையத்தளத்தில் பெயரிடப்பட்டிருந்தது. ஆனால், பின்பு அது உப பிரதேச செயலகமாக மாற்றப்பட்டது. அமைச்சரவை அனுமதியளித்த ஒரு பிரதேச செயலகம் எவ்வாறு உப பிரதேச செயலகமாக மாற்றப்படும்? அதற்கான அதிகாரத்தை யார் கொடுத்தது? அமைச்சின் செயலாளருக்கோ, அரச அதிபருக்கோ அமைச்சரவைப் பத்திரத்தில், அமைச்சரவை அனுமதியளித்த விடயத்தில் மாற்றம் செய்ய முடியுமா?

கல்முனை தெற்கு பிரதேச செயலகத்துடன் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை இணைக்க முடியுமா? அந்த அதிகாரம் எப்படி வந்தது? யாருக்கும் அந்த அதிகாரம் கிடையாது.

07

# சபையில் நேற்று அமைதியின்மை



மட்டக்களப்பில் இடம்பெறும் வாள்வெட்டுச் சம்பவங்கள் தொடர்பாக சபையில் கேள்வி எழுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் ஒலிவாங்கியை இடைநிறுத்தியதை அடுத்து சபையில் நேற்று அமைதியின்மை ஏற்பட்டது.

கடந்த 20 ஆம் திகதி, மட்டக்களப்பு ஆரையம்பதி மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்தவர்கள் மீது, மர்மக் குழு ஒன்று வாள்களால் தாக்கியதில் இருவர் படுகாயமடைந்தனர்.

அதேபோல், நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு – கல்லடிப் பாலத்துக்கு அருகிலுள்ள உணவகம் ஒன்றுக்கு முன்னால் நடந்த கத்தி வெட்டுத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார்.

நேற்றைய நாடாளுமன்ற அமர்வின் போது, இந்த விவகாரம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கருத்துத் தெரிவிக்க முயன்றபோது, சபாநாயகர் குறுக்கிட்டு, "இது ஒழுங்குப் பிரச்சினை அல்ல, எனவே சபை ஒத்திவைப்பு பிரேரணையின்போது இதனைக் கொண்டு வரலாம்" என்றார்.

அதேபோல், இது ஒரு தேசிய பிரச்சினை அல்ல என்று சபாநாயகர் கூறியதால் சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.

மேலும், நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவும் திருகோணமலை வைத்தியசாலையில் வைத்தியர் ஒருவர் நோயாளர்களை தாக்கிய சம்பவம் தொடர்பில் சபையில் கேள்வி எழுப்ப முற்பட்ட நிலையில் சபாநாயகர் அனுமதி மறுத்திருந்தார்.

இதனையடுத்து, சபையில் அமைதியின்மை ஏற்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், எதிர்க்கட்சித் தலைவர் தலையிட்டு நிலையியல் கட்டளைக்கு அமைய நாடாளுமன்ற உறுப்பினர்களான சாணக்கியன மற்றும் அர்ச்சுனாவுக்கு ஒவ்வொரு நிமிடங்களைப் பெற்றுக்கொடுக்குமாறு கோரிய நிலையில் அவர்களுக்கான ஒரு நிமிடம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தமிழருக்கு...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அப்படி மாற்ற வேண்டுமெனில் மீண்டும் ஒரு அமைச்சரவைப் பத்திரம் போட்டு அங்கீகாரம் பெற்றே அந்தப் பிரதேச செயலகத்தை உப பிரதேச செயலகமாகத் தரமிறக்க முடியும்.

இந்தக் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தின் கீழ் 29 கிராம சேவகர் பிரிவுகள் உள்ளன. அங்கு நில அத்துமீறல்கள் நடக்கின்றன. பல்லாயிரம் கோடி ரூபா பெறுமதியான நில மோசடி நடந்துள்ளது. அங்கு பாரிய நில மோசடி நடப்பதற்காக அது ஒரு உப பிரதேச செயலகமாகக் காட்டப்படுகின்றது.

பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சில் அமைச்சரவைப் பத்திரம் மறைக்கப்பட்டுள்ளது.

நீங்கள் ஊழலை ஒழிப்பீர்கள், நியாயத்தைத் தருவீர்கள், சரியான நிர்வாகத்தைக் கட்டமைப்பீர்கள் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தின் கீழுள்ள பகுதிகளில் நில மோசடிகளைச் செய்வதற்காக அரசியல்வாதிகள் மட்டுமன்றி அரச உயர் அதிகாரிகளுக்கும் இலஞ்ச, ஊழல் தொடர்பு இருக்கின்றது.

இதனை நீங்கள் ஒரு விசேட குழுவை அமைத்துக் கண்காணிக்க வேண்டும், கண்டுபிடிக்க வேண்டும். அந்த உப பிரதேச செயலகத்துக் கான பிரதேச செயலக அங்கீகாரத்தைத் தர வேண்டும்.

இந்த அரசின் பிரதி அமைச்சர் இதில் பிழை, அநீதி நடந்துள்ளது என்று ஏற்றுக் கொண்டிருந்தார். எனவே, நீங்கள் எமக்கு நியாயம் வழங்க வேண்டும்.

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம் தொடர்பான முழு ஆவணங்களையும் நான் சபைக்குச் சமர்ப்பிக்கின்றேன். அமைச்சர் இதனைப் பார்த்து விட்டு விசேட குழு ஒன்றை அமைத்து எமக்கான நீதியைப் பெற்றுத்தர வேண்டும்.

கடந்த ஆட்சிகளில் இருந்த ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர் வரை தமது ஆட்சியைப் பாதுகாப்பதற்காக எம்மைத் தொடர்ச்சியாக ஏமாற்றி வந்தார்கள். ஆனால், உங்களுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் உள்ளது." – என்றார்.

## வேலைநிறுத்தப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இன்று (05) முதல் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்க அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தீர்மானித்திருந்தது.

சுகாதார அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸவுடன் நேற்று பிற்பகல் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டது என்று அந்தச் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் பிரபாத் சுகதபால தெரிவித்தார்.

அரச வைத்திய அதிகாரிகளின் மேலதிக பணிக் கொடுப்பனவு மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு குறைப்புக்கு எதிராகவே அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இஷாரா செவ்வந்தியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்யப்பட்ட சம்பவத்துக்கு உதவிய முக்கிய சந்தேகநபரான இஷாரா செவ்வந்தி தொடர்பில் தகவல் வழங்குபவர்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்ட பரிசுத் தொகையை அதிகரித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, 10 இலட்சம் ரூபாவாக இருந்த பரிசுத் தொகை தற்போது 12 இலட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும் தகவல் வழங்குபவர்களின் இரகசியத் தன்மை பாதுகாக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இஷாரா செவ்வந்தி தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்திருந்தால், அதனை அறியப்படுத்துவதற்குப் பின்வரும் தொலைபேசி எண்களைத் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. பணிப்பாளர், கொழும்பு குற்றவியல் பிரிவு – 071 859 1727

2.கொழும்பு குற்றவியல் பிரிவின் கட்டளைத் தளபதி – 071 859 1735

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பதிலடி கொடுப்போம்!

இலங்கையில் நீண்ட காலம் புரையோடிப் போய் இருக்கும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும், நடைபெற்ற அசம்பாவிதங்கள், குற்றங்கள், கொடூரங்கள் தொடர்பில் நீதி நிலைநாட்டப்படுவதற்கும் தேசிய மக்கள் சக்தியின் புதிய அரசுக்கு ஒரு வாய்ப்பும் கால அவகாசமும் வழங்கப்பட வேண்டும் என்று பொதுவாக மிதவாதப் போக்கில் கருத்து வெளியிட்டு வந்த ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் கூட, இப்போது இந்தக் குறுகிய காகத்திலேயே புதிய அரசின் போக்கில் முழுமையாக நம்பிக்கை இழந்து விட்டார் என்பது துலாம்பரமாகி வருகிறது.

ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத் தொடரை ஒட்டி அவர் நேற்று கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்த கருத்துக்கள், தேசிய மக்கள் சக்தி அரசு மீது அவர் நம்பிக்கை இழந்து விட்டார் என்பதை அப்பட்டமாக வெளிப்படுத்தி நிற்கின்றன.

ஐ.நா. சபையுடன் இணைந்து - இணங்கி - செயல்படுவோம் என்று ஜெனிவாவில் அண்மையில் இலங்கை வெளிவிகார அமைச்சர் விஜித ஹேரத் கூறிய கருத்தை சுமந்திரன் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம், இழப்பீடுகளை வழங்குவதற்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாட்டுக்காக உருவாக்கப்பட்ட அலுவலகம் ஆகிய மூன்றையும் பலப்படுத்தி, அதன்மூலம் நல்லிணக்கப் பொறிமுறை ஒன்றை உருவாக்குவதன் வாயிலாக நீண்ட காலப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று விஜித ஹேரத் அங்கு கூறியிருந்தார்.

ஆனால், அவரது அரசு தற்போது சமர்ப்பித்துள்ள வரவு - செலவு திட்டத்தில் இந்த அலுவலகங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டும் சுமந்திரன், இந்த விடயத்தில் அரசு வாயால் அளக்கிறது, வெறுங்கையால் முழம் போடுகின்றது, செயலில் எதுவும் செய்ய அது தயாராக இல்லை என்பதையே நிதி ஒடுக்கீடு செய்யாத அதன் கபடத் திட்டடம் அம்பலப்படுத்துகின்றது எனக் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றார். அவர் கூறுவது முற்றிலும் உண்மையே.

இலங்கையில் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு எதுவும் உண்மைகளை மூடி மறைத்து, பொய்மைகளைக் கட்டவிழ்த்து விட்டு, அவற்றின் மேல் கட்டி எழுப்பப்பட முடியாதது என்பது வெளிப்படையான - தெளிவான - உண்மையாகும்.

இலங்கையில் யுத்தத்தை ஒட்டிய காலத்தில் இடம் பெற்ற போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் போன்றவை தொடர்பான சாட்சியங்கள், ஆதாரங்கள், சான்றுகள் போன்றவற்றை அழிய விடாமல் பாதுகாப்பதற்காக சாட்சிய சேகரிப்பு மற்றும் பதிவுப் பொறிமுறை ஒன்றை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் தற்போது முன்னெடுத்து வருகின்றது.

ஆனால் அதை அடியோடு நிராகரிப்பதாக தேசிய மக்கள் சக்தி அரசு இப்போது ஜெனிவாவில் வைத்து அறிவித்து இருக்கின்றது.

இது கடந்த கால உண்மைகளை அம்பலப்படுத்தும் நடவடிக்கைக்கு எதிரான திட்டமிட்ட சதிச் செயல் - நயவஞ்சக நாடகம் - என்பதை தமிழர் தரப்பு நன்கு அறியும். அதனையே சுமந்திரன் நேற்று சுட்டிக்காட்டி இருக்கிறார்.

இந்தக் குற்றங்கள், கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் யுத்தம் முடிந்து 16 ஆண்டுகள் கடந்தும் இலங்கையில் எதுவுமே நடக்கவில்லை. நீதியை நிலைநாட்டவோ, உண்மைகளைக் கண்டறியவோ, பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்தவோ எதுவும் இங்கு நடக்காத சூழ்நிலையிலேயே இருக்கின்ற ஆதாரங்கள், ஆவணங்களை அழிய விடாமல் சேமிப்பதற்கான - பதிவதற்கான - காபந்து பண்ணுவதற்கான - நடவடிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் முன்னெடுத்திருக்கின்றது.

அதை நிராகரிக்கும் தேசிய மக்கள் சக்தி அரசின் விஷமத்தனமான போக்கு, தமிழர்களின் இனப்பிரச்சினை சம்பந்தப்பட்ட கடந்த கால விடயங்களில் உண்மைகளை மூடி மறைத்து, அப்படியே அவற்றை அழித்துவிட எத்தனிக்கும் கொழும்பின் திட்டத்தை அம்பலப்படுத்தி இருக்கின்றது.

அதையே நேற்று தமது பத்திரிகையாளர் மாநாட்டில் விளக்கி இருக்கிறார் சுமந்திரன்.

தமிழர்களுக்கு எதிரான இத்தகைய கபடத் திட்டத்தை முன் வைத்திருக்கும் பௌத்த - சிங்களப் பேரினவாத சக்தியான தேசிய மக்கள் சக்தி, இந்த நயவஞ்சகத் திட்டத்தை ஒருபுறம் முன்னெடுத்துக் கொண்டு, மறுபுறம் ஈழத் தமிழர்களின் ஆணை பெற்ற கட்சியாக தன்னைக் காட்ட முனைவதற்கு தமிழர்கள் இடமளிக்கக்கூடாது. அவர்களின் - தேசிய மக்கள் சக்தியின் - அந்த உரித்துக் கோரலுக்கு எதிரான நல்ல பதிலடியை இந்த உள்ளூராட்சித் தேர்தல் மூலம் தமிழர்கள் உறுதியாக வழங்க வேண்டும்.

# குட்டித் தேர்தலில் கொழும்பில் களமிறங்கும் தமிழரசுக் கட்சி

## உறுதிப்படுத்தினார் சுமந்திரன்



வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கொழும்பில் களமிறங்குவதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி தயாராகி வருகின்றது. இதற்கமைய கொழும்பில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தத் தகவலை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் உறுதிப்படுத்தினார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போது கொழும்புவாழ் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி கொழும்பு மாநகர சபையில் ஆசனங்களைக் கைப்பற்றுவது தொடர்பில் கட்டம் கட்டமாக ஆலோசனை நடைபெறவுள்ளது.

இது குறித்து கட்சியின் மத்திய செயற்குழுவில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவர் சட்டத்தரணி சி.இரத்தினவடிவேல் சுட்டிக்காட்டினார்.

அதற்கமைய முதற்கட்டமாக எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்களைத் தெரிவுசெய்யும் பொருட்டு கட்சியின் செயற்பாட்டாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தத் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிட விரும்புபவர்கள் தமது முழுப்பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், வட்டாரம், அரசியல் செயற்பாடுகளில் கொண்டிருக்கும் அனுபவம் உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் செயலாளர், இலங்கைத் தமிழரசுக்கட்சி, இலக்கம் 40, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியின் ஊடாக கட்சியின் தலைமைச் செயலகத்துக்கு அனுப்பிவைக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்துக் கருத்து வெளியிட்டிருக்கும் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், தற்போது நாட்டில் தோற்றம் பெற்றிருக்கும் அரசியல் கலாசாரத்துக்கு ஈடுகொடுக்கும் விதமாகவும், கொழும்புவாழ் தமிழ் மக்களால் நீண்டகாலமாக முன்வைக்கப்பட்டுவரும் கோரிக்கைக்குச் செயல் வடிவம் கொடுக்கும் வகையிலும் கட்சியினால் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

# வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகனைச் சந்தித்த சேலம் ஆர்.ஆர். புரியாணி நிறுவனத்தின் தலைவர்






வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் சேலம் ஆர்.ஆர். புரியாணி நிறுவனத்தின் தலைவர் தமிழ்ச்செல்வனுக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது வடக்கு மாகாணத்தின் வர்த்தகத் தொழில்துறை மேம்பாடு தொடர்பிலும், சுற்றுலாத்துறையை வடக்கில் அபிவிருத்தி செய்வது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

மேலும், வடக்கில் தமது தொழில் முயற்சியை முன்னெடுப்பதிலுள்ள நடைமுறைச் சவால்கள் தொடர்பாகவும் ஆளுநருக்குச் சேலம் ஆர்.ஆர். புரியாணி நிறுவனத்தின் தலைவர் எடுத்துக்கூறினார்.



# சுமந்திரனுக்கு ஒரு பகிரங்க மடல்...!

- என்.விஜேன் -

**திரு சுமந்திரன் அவர்களே!**

வணக்கம். முதலில் தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளராக தெரிவு செய்யப்பட்டமைக்கு வாழ்த்துக்கள். இதையும் நீங்களும் உங்களது குழுவினருமே திட்டமிட்டு அரங்கேறியது என எம்மத்தியில் உள்ள பல (அரைகுறை) அரசியல் ஆய்வாளர்கள் சித்திரிக்க ஆரம்பித்து விட்டார்கள். அவர்களின் சதித்திட்ட கோட்பாடுகளை (conspiracy theory), புறந்தள்ளி விட்டு உங்களை எதிர்நோக்கி உள்ள பல கடமைகளையம், நீங்கள் செய்த ஒரு சில தவறுகளையும் கோடிட்டு காட்டவே இந்தக் கட்டுரையை வரைகிறேன். இது என்னைப் போன்ற பல மிதவாதிகளின் கருத்துகள் ஆகும். உங்களை பெரிதும் மதிக்கும் கம்பவரிதி கூட நடக்கும் கூத்துக்களைப் பார்த்து நொந்து போய் உள்ளார் என்பது அவரின் எழுத்துக்களில் இருந்து புலனாகிறது.

சற்றே உங்களது கடந்த கால அரசியல் பயணத்தை திரும்பிப் பார்த்தால், மறைந்த சம்பந்தன் ஐயா திடமான இரண்டாம் தலைமைகளை உருவாக்க நினைத்தே உங்களையும் விக்னேஸ்வரனையும் கட்சிக்குள் அழைத்து வந்தார் என்பது புரியுன். தமிழரசின் சட்டிக்குள் உள்ளது போதாது என்று அவர் அறிந்திருந்தார். சி.வி.கே., குலநாயகம் போன்ற ஆற்றல் மிக்கவர்களும் மூப்பு எய்தி கொண்டு போவதால் தனக்குப் பின் கட்சியை கட்டிக் காக்க அவர்கள் சிரமப்படுவார்கள் என சம்பந்தன் அறிந்திருந்தார். ஆயினும் துரதிஷ்ட வசமாக விக்னேஸ்வரன் முதலமைச்சர் பதவி கிட்டியவுடன் பதவி மோகம் தலைக்கேறி சம்பந்தன் முதுகிலே குத்த ஆரம்பித்தார். முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பதற்கமைய 'பார்' ஆண்டவர் தற்போது மக்களால் நிராகரிக்கப்பட்டு ஓரமாக உட்கார்ந்து உள்ளார். அவரின் கட்சிக்காரர்களே தோல்விக்கு காரணம் அவரின் சொதப்பல்கள் தான் என்று பகிரங்கமாகவே புலம்பித் திரிந்தார்கள். ஆனால் தாங்கள் சம்பந்தன் ஐயாவிற்கு விசுவாசமாகவே இருந்தீர்கள். அபரிமித விசுவாசம் மற்றும் மரியாதை நிமித்தம் காரணமாக சில முக்கிய விடயங்களையும் கோட்டை விட்டீர்கள். உதாரணத்திற்கு கட்சியில் உள் தேர்தல் 10 வருடங்களாக நடத்தப்படாது இருந்த போது சட்ட மேதையான நீங்களாவது தேர்தலை நடத்த அழுத்தம் கொடுத்து இருக்கவேண்டும். ஆனால் செய்யவில்லை.

கட்சிக்குள் உள்குத்துகள் ஒருபுறம் இருக்க, தாயக அரசியலில் ஆதிக்கம் செலுத்த நினைத்த சில

தொடர்ச்சி ▼

# சுமந்திரனுக்கு ஒரு பகிரங்க மடல்...!

தொடர்ச்சி ▲

புலம்பெயர்வாதிகள் வெளிக்குத்துக்களை ஆரம்பித்தனர். தங்கள் சொற்படி ஆடக்கூடிய ஒருவரை தமிழரசுக் கட்சியின் தலைவராக்க வேண்டும் என திட்டங்கள் தீட்டி சிறிதரனை ஆதரிக்க ஆரம்பித்தார்கள். இதற்காக பணத்தை வாரி வழங்கியது மட்டுமன்றி உங்களுக்கு எதிராக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விஷமப் பிரச்சாரங்களையும் பரப்பினார்கள். நீங்களும் சாணக்கியனும் கலந்து கொண்ட கனடா கூட்டத்தில் கலவரம் ஏற்படுத்தித் தாகாத வார்த்தைப் பிரயோகங்களையும் மேற் கொண்டார்கள். அவர்களின் தராதரம் அவ்வளவு தான். ஆனால் சில புலம்பெயர்வாதிகள் இன்னும் பல படிகள் மேலே போய் உங்களை தீர்த்துக்கட்டும் முயற்சியில் 2017 ஆம் ஆண்டிலிருந்தே ஈடு படுகிறார்கள் எனப் புலனாய்வுத் துறை கண்ட றிந்தது. இதனால் இலங்கை அரசாங்கம் உங்களுக்கு தனிப்பட்ட பாதுகாவலர்களை இன்றுவரை வழங்கிக் கொண்டு இருக்கிறது. சமீபத்தில் நீதி மன்றில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த கணேமுல்ல சஞ்சீவ விடமே இதற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டது என தெரிவிக்கப்படுகிறது. இதில் இருந்து இந்த ஒரு சில புலம் பெயர் நபர்கள் தங்கள் சொற்படி ஆடாத மாற்றுக் கருத்து உள்ளவர்கள் அனைவரும் துரோகிகள், தீர்த்துக் கட்டப்பட வேண்டியவர்கள் என்ற பழைய கடும் போக்கை கொண்டவர்கள் மட்டுமல்லர் எந்தப் பாதகத்திற்கும் அஞ்சாதவர்கள் என்று தெரிந்தது. ஆயினும் இதையிட்டு நீங்கள் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை என்பது உங்கள் தைரியத்தை பறைசாற்றுகிறது. இனியாவது இந்தப் புலம் பெயர் வாதிகளுக்கு தலையாட்டுபவர்கள் கவனமாக இருப்பது நல்லது.

நிற்க, கட்சியின் தலைவர் தேர்வின் போது மத்திய குழு எண்ணிக்கைக்கு மேலதிகமாக பெருவாரியான வெளிநபர்களை வாக்களிக்க வைத்து உங்களை தோற்கடித்தார்கள் சிறிதரன் மற்றும் மறைந்த தலைவர் மாவை போன்றோர். இந்த வெளிநபர் தலையீட்டை எதிர்த்து வாக்களிப்பை நடத்த நீங்கள் எதிர்ப்பு தெரிவித்து இருக்க வேண்டும் அல்லது வெளிநடப்பு செய்திருக்க வேண்டும். ஆனால் நீங்களோ தேர்தல் முடிந்த பின் தோல்வியை ஒப்புக் கொண்டு செயலாளர் பதவியையாவது தருமாறு கோரினீர்கள். இதன் மூலம் தலைவர் வடக்கு என்றால் செயலாளர் கிழக்கு என்னும் நியதியையும் கைவிட வேண்டிய நிலை எழுந்திருக்கும், நல்ல காலம் அது அப்போது நடக்கவில்லை. பின்னாளில் கட்சிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை முடிக்க விடாமல் சிறிதரன் குழுவினர் , மத்திய குழு உறுப்பினர்களுக்கு மேலதிகமாக வந்த கூட்டம் மீண்டும் புதிய தேர்தலில் பங்கேற்க வேண்டும் எனத் தொடர்ந்து நீதிமன்றத்தில் அடம்பிடித்து வருவது வருந்தத்தக்கது மட்டுமன்றி கட்சியின் நிலையை மேலும் சரிவிற்கு இட்டுச் செல்வது கண்கூடு. உள்ளூராட்சித் தேர்தலிலும் இந்த உட்கட்சி ஒற்றுமை இன்மையினால் பாதிப்புக்கள் அதிகமாக இருக்கும்.

சென்ற பொதுத்தேர்தல் காலத்தில் உங்களது நடவடிக்கைகளில் பல முரண்பாடுகளை அவதானிக்க முடிந்தது. தந்தை செல்வாவின் பேரன் மற்றும் சயந்தன், போன்ற நல்ல தகுதியுள்ள வேட்பாளர்கள் இருந்தும் அவர்களுக்கு மக்களிடையே சரியான அறிமுகப்படுத்தலை ஏற்படுத்தாது திடுதிப்பென்று கொண்டுவந்து நிறுத்தியது அவர்களை தோல்வியிலேயே தள்ளியது. குறைந்ததுமாகாணசபைஅல்லதுஉள்ளூராட்சிசபைகளில் நிறுத்தி மக்கள் பணியாற்றி பெயர் வாங்கிய பின் நாடாளுமன்றத் தேர்தலில் பங்கேற்க வைத்திருக்க வேண்டும். அதை விடக் கொடுமை பெண் வேட்பாளர்கள் தெரிவு. ஏற்கனவே இருந்தவர்கள் முற்றாக ஒதுக்கப்பட்டு புதியவர்கள் உட்கொண்டு வரப்பட்டார்கள். பழையவர்களுக்கு சந்தர்ப்பம் ஏன் வழங்கவில்லை என்பதை அவர்களுக்கு முதலில் தெரிவித்து இருக்க வேண்டும் அல்லவா? இறுதியில் புதியவர்களுக்கான தகுதிகள் இருந்தும் அவர்களும் தோற்றுப் போனார்கள். நீங்கள் பத்திரிகையாளர் சந்திப்பில் ஒருவித நையாண்டியுடன், காடு மலை எல்லாம் தேடியும் பெண் வேட்பாளர்கள் யாரும் கிடைக்கவில்லை என்று கூறினீர்கள். இதன்மூலம் பொது மக்களிடையே ஒரு அபிப்பிராயம் உருவானது. நீங்கள் நீண்ட நாள் உறுப்பினர்களை ஒதுக்கி தள்ளிவிட்டு உங்களது ஆள்களையே எங்கும் திணிக்க பார்க்கிறீர்கள் என்று. இதுவும் மக்களின் வெறுப்பிற்கு உங்களை ஆளாக்கியது. ஏற்கனவே சிறிதரன் குழு தங்களை அப்பாவிகளாகவும் உங்களால் பாதிக்கப்பட்டவர்கள் ஆகவும், கட்சியை உடைத்தவர் நீங்களே என்றும் பிரசாரம் செய்து வந்த நிலையில், வேட்பாளர் தேர்வுக் குளறுபடிகளும் சேர்ந்து உங்கள் தேர்தல் தோல்விக்கு வழி வகுத்தது. தங்களின் மூளை பலம் எதிரணியின் பிரசாரத்தை மக்களிடையே முறியடிக்க தவறி விட்டது. உங்கள் தரப்பு நியாயங்களை அடிக்கடி மக்கள் சந்திப்புக்கள் மற்றும் பத்திரிகையாளர் சந்திப்புக்களில் வெளியிடாமல் இருந்தது வேறு, மக்களை எதிரணியின் பிரசாரங்கள், வதந்திகளை நம்பவைத்து உங்களுக்கு எதிர் விளைவுகளை தேர்தலில் ஏற்படுத்தியது உண்மை. இதே போல் உள்ளூராட்சி சபைத் தேர்தல் முறையை கருதி யாருக்கும் எந்த சபையிலும் அறுதிப் பெரும்பான்மை கிட்டாது என்பதனால் தனியாக போட்டியிட்டு பின்னர் கூட்டாக ஆட்சியமைக்கலாம் என்ற உங்களது கருத்தை வேண்டுமென்றே திரித்து நீங்கள் கூட்டமைப்பை உடைத்து விட்டீர்கள் என மக்களிடம் கூறித்திரிந்தது செல்வம், சுரேஷ், சித்தார்த்தன் கூட்டம். செல்வம் அன்ட் கோவின் நோக்கமே உங்களை ஓரங்கட்டி உத்தியோக பூர்வ பேச்சாளர் பதவியை பிடிப்பதுதான். ஆனால் அந்நேரத்தில் நீங்களோ, கட்சியோ இதைப்பற்றி தெளிவாக மக்களிடம் விளக்காத காரணத்தினால் தமிழ் கட்சிகளின் ஒற்றுமையை குலைப்பவரும் நீங்கள்தான் என்று மக்கள் நம்பினர். இதுவும் தேர்தலில் உங்களைப் பாதித்தது. ஆயினும் இப்போது விடயங்கள் தெளிவாக ஆரம்பிக்க, இந்த தோற்றுப் போன ஒட்டுக் குழுக்கள் தமிழரசுக் கட்சியை மீண்டும் அண்டப் பார்க்கிறார்கள் என்பது வேறு விஷயம். ஆனால் ஒன்று, வெறும் தேர்தல்களை மட்டும் குறிவைத்து உருவாகும் ஒற்றுமையோ, கூட்டணியோ பல காலம் நிலைக்காது என்பது மட்டுமல்ல, மக்களுக்கு எந்தவித பயனையும் தராது என்பதை தமிழரசு கட்சியில் உள்ள அனைவரும் உணர வேண்டும். உங்களுக்கும் சரி கட்சிக்கும்

தொடர்ச்சி ▼

# சுமந்திரனுக்கு ஒரு பகிரங்க மடல்...!

தொடர்ச்சி ▲

சரி மக்கள் தொடர்பாடல் குறைபாடு ( communication problem) உண்டு என்பது தெளிவாகப் புலப்படுகிளது. நீங்களோ தமிழரசு கட்சியோ பல முக்கியமான விடயங்களில் கருத்து தெரிவிக்காமல் அவ்வப்போது மௌனமாகி விடுகிறீர்கள். உதாரணத்திற்கு 'அடிதடி' அர்ச்சுனா, சமீபத்தில் அமைச்சர் சந்திரசேகரை கள்ளத்தோணி என்ற பாணியில் நாடாளுமன்றில் விமரிசித்து இருந்தார். இந்த கீழ்த்தரமான கருத்திற்கு எதிராகத் தமிழரசுக்கட்சி வாயே திறக்கவில்லை! மலையக தமிழரின் குடியுரிமையை பறிக்கும் மசோதாவிற்கு ஜி.ஜி.பொன்னம்பலம் ஆதரவளித்ததை எதிர்த்து தந்தை செல்வா ஆரம்பித்த தமிழரசுக் கட்சியில் உள்ளவர்கள், வாய்க்கு வந்த படி நாகரீகம் இன்றி உளறும் அர்ச்சுனாவை இவ்விடயத்தில் கண்டிக்காது வாளாவிருந்தது மன்னிக்க முடியாதது. இவ்வாறு பல்வேறு குறைபாடுகள் கட்சியில் உள்ளது. இவை அனைத்தையும் சீர் செய்து கட்சி நேர்கோட்டில் பயணித்தால் மட்டுமே, இழந்து போன மக்களின் நம்பிக்கையை மீண்டும் பெற முடியும்.

நிற்க, பொதுத்தேர்தல் நேரத்தில் ஒரு வெடி ஒன்று கொளுத்திப் போடப்பட்டது. அதாவது தேசிய மக்கள் சக்தி அரசில் நீங்கள்தான் வெளிவிவகார அமைச்சர் ஆக நியமிக்கப்படுவீர்கள் என்று! எதற்காக இந்த புரளி கிளப்பப்பட்டதோ தெரியவில்லை. சில வேளை இதையிட்டு தமிழ் மக்கள் உங்களுக்கு அதிக வாக்குகளை அளிப்பர் என நினைத்திருக்கலாம். இதை நீங்கள் மறுத்து அறிக்கை விடாதது வேறு இந்த சந்தேகத்தை வலுப்படுத்துகிறது. இறுதியில் அநுர, பிமல் மற்றும் சந்திரசேகரின் நையாண்டிகளுக்கு ஆளாக நேர்ந்ததுதான் மிச்சம். உங்களைப் போன்ற ஒரு கற்றறிந்த சட்டமேதைக்கு இதைப்போன்ற மலிவான உத்திகள் ( cheap tactics) தேவைதானா? சொந்தக் காசில் சூனியம் வைத்துக் கொள்வதென்பது இதுதானோ!

துரதிஷ்டவசமாக தேர்தலில் தோற்ற பின்பும் கூட உங்களுக்கும் சிறிதரனுக்கும் இடையிலான உரசல்கள் நின்றபாடில்லை. இந்தியா செல்ல முன் சிறீதரன் விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டது அவர் கனடாவில் ஒரு தடை செய்யப்பட்ட அமைப்பின் கூட்டத்தில் பங்கு பற்றியமையால் என்று நீங்கள் கூறப்போக, அவர் அதனை தனக்கெதிராக நீங்கள் செய்த சதி என்று உட்கட்சிப் பிரச்சினையை நாடாளுமன்றத்திலும் முறையிட்டு நியாயம் கேட்டார். முதலில் கட்சியின் பதில் தலைவரிடம் அல்லவா முறைப்பாடு செய்திருக்க வேண்டும்! ஆனால் நீங்கள் கூட இந்த விடயத்தை எப்படி அறிந்து கொண்டீர்கள் என இதுவரை தெளிவு படுத்தவில்லை! மொத்தத்தில் சந்தி சிரித்தது மட்டுமல்ல, உங்களதும் கட்சியினதும் இமேஜ் இன்னும் டேமேஜ் ஆகியது!

எனவே தற்போது நடந்த தவறுகளை திருத்திக் கொண்டு கட்சி இழந்து போன செல்வாக்கை மீண்டும் நிலை நிறுத்த பதில் தலைவர் சி.வி.கேயும் நீங்களும் மற்றவர்கள் எல்லோரையும் சேர்த்துக் கொண்டு செயற்பட, ஒரு வேலைத்திட்டத்தை உடனடியாக வகுக்க வேண்டும். அடுத்த தலைமுறைகள் வெறுமனே வெற்றுத் தமிழ் தேசிய கோஷங்களுக்கு எடுபடப் போவதில்லை.

அவர்கள் வேலை வாய்ப்புக்களையும் அபிவிருத்தி திட்டங்களையுமே எதிர்பார்க்கிறார்கள். இது 2020 தேர்தலில் கூட சற்றே வெளிப்பட்டது. அங்கஜன், பிள்ளையான் போன்றவர்களை இதன் காரணமாகவே மக்கள் தெரிவு செய்தார்கள். அபிவிருத்தி, வேலை வாய்ப்பு மற்றும் மீள் குடியேற்ற (உள்ளூர் மற்றும் இந்தியா வாழ் ஏதிலிகள்) முயற்சிகளை கூட்டமைப்பு மேற்கொள்ள வேண்டிய அவசியத்தை பல்வேறு பத்திரிகைகளில் நான் எழுதி உள்ள கட்டுரைகளில் ஆணித்தரமாக கோடிட்டு காட்டியுள்ளேன். ஆனால் கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன கதையாக உட்கட்சிப் பூசல் மேலும் வலுவடைந்து 2024 தேர்தலில் இன்னும் மோசமாக, அதுவும் ஒரு தேசியக் கட்சியிடம் மண் கவ்வ நேர்ந்தது. இதுவரை நீங்களோ மற்றைய நாடாளுமன்ற உறுப்பினர்களோ, தொகுதிகளில் ஆற்றிய அபிவிருத்தி திட்டங்களைப் பற்றி யாருக்கும் பெரிதாக தெரியாது. இனியாவது மக்களுடன் கலந்து பேசி அரசின் அனுசரணையுடன் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். தாயகத்திலும் மக்களிடத்திலும் அக்கறை கொண்ட பல புலம்பெயர் தமிழர்கள் உடன் பேசி சிறிய நடுத்தர தொழில்களை ஆரம்பித்து வேலை வாய்ப்புக்களை வழங்க ஆவன செய்ய வேண்டும். இதன் மூலம் கள்ள பாஸ்போட் மூலமாவது வெளிநாடுக்கு செல்ல தப்பிச் செல்ல நினைக்கும் இளைஞர்களை உள்ளூரில் வாழ வைக்க வழி செய்யலாம். அநுர அரசு வடக்கிற்கு கணிசமான நிதி பட்ஜெட்டில் ஒதுக்கியுள்ளது. இதுவும் மக்களிடையே அவர்களின் செல்வாக்கை மேலும் வலுப்படுத்தி உள்ளது. ஆனால் கிழக்கை கொஞ்சம் கைகழுவி விட்டார்கள். எனவே கிழக்கிற்கும் நிதி ஒதுக்க வலியுறுத்துவது மட்டுமன்றி அநுர குமார கூறியபடி இந்திய உதவித் திட்டங்களை கொண்டுவர இந்திய தூதுவருடனும் பேச்சு வார்த்தை நடத்தி வேண்டும் . இவற்றை புறந்தள்ளிவிட்டு அரசாங்கம் சமூக, பொருளாதார அபிவிருத்திகளைப் பார்த்துக் கொள்ளட்டும் நாங்கள் வழமை போல் தேசியக் கோஷத்தை எழுப்பிக் கொண்டு இருப்போம் என நினைத்தால் தமிழரசு கட்சி விரைவில் காணாமலே போய்விடும். தாய்க்கட்சியாக மக்களை வழி நடத்த வேண்டிய கட்சி உட்பூசல்களால் சிதைந்து மக்களை நட்டாற்றில் விட்டுச் செல்வது மாபெரும் தப்பு . எனவே ஈகோ பிரச்னைகளை விட்டுவிட்டு எல்லோரும் மனம் திறந்து பேசி, உட்கட்சி பூசல்களை விரைவாக முடிவிற்கு கொண்டு வாருங்கள்.

உரிமைக்கு குரல் கொடுக்கும் அதே நேரத்தில் வளமான வாழ்விற்கும் வழி சமைப்போம் என்ற கோட்பாட்டை உறுதியுடனும் இதய சுத்தியுடனும் கடைப்பிடித்தால் நீங்களும் மற்றவர்களும், கட்சியும் இழந்த செல்வாக்கை ம மக்களிடம் மீண்டும் அடையலாம். இல்லாவிடின் சென்ற தேர்தலின் பின்னர் பல சிங்கள அரசியல்வாதிகளுக்கு நடந்ததைப் போல ஓய்ந்து போய் ஓரமாக உட்கார வேண்டியதுதான். தந்தை செல்வா உருவாக்கிய கட்சி, அண்ணன்கள் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், நீலன் திருச்செல்வம், ரவிராஜ் மற்றும் ஜோசப் பரராஜசிங்கம் போன்றோர் உயிரைக் கொடுத்து வளர்த்த கட்சியை, முற்றாக அழித்தொழித்த பாவத்தையும் தேடிக் கொள்ளாதீர்கள்....!






# தென்கிழக்குப் பல்கலை கல்விசாரா ஊழியர்களும் நேற்று அடையாளக் கவனவீர்ப்புப் போராட்டத்தில்

**(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)**

தென்கிழக்கு பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களும் நேற்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12:00 மணி முதல் 1.00 மணி வரை அடையாளக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கல்விசாரா ஊழியர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் பங்குபற்றியோர் "நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் இருக்கின்ற சம்பள முரண்பாட்டை தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும், குறிப்பாக கடந்த 9 வருடங்களாக சம்பஎம் முரண்பாட்டுப் பிரச்சினை நீடிக்கின்றது, இதற்கு எந்த ஒரு அரசும் அதிகாரிகளும் இதுவரை தீர்வு தரவில்லை" என்று தெரிவித்தனர். மேலும், அரசாங்கம் முன் வைத்துள்ள புதிய வரவு செலவுத் திட்டத்தில் கூட பல்கலைக்கழகத்தில் கடமையாற்றுகின்ற கல்விசாரா ஊர்களுக்கு எந்த விதமான வரப்பிரசாதங்களும் முன்வைக்கப்படவில்லை.ஆகவே, அரசாங்கம் எமது மேற்படி கோரிக்கைகளையும் தீர்க்கப்படாத ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை வழங்குமாறு வலியுறுத்தி இந்தப் போராட்டம் நடைபெற்றதாக தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் கல்விசாரா ஊழியர்கள் சங்கத்தின் செயலாளர் எம். எம். காமில் தெரிவித்தார்.











# வவுனியாவிலும் பல்கலை கல்வி சாரா ஊழியர்கள்
# நேற்று ஒரு மணி நேரம் கவனவீர்ப்புப் போராட்டம்

(கி.வசந்தன்)

வவுனியா பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களும் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

நாடு முழுவதும் அனைத்தொ பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதற்கமைவாக, வவுனியா பம்பைமடுப் பகுதியில் பல்கலைக்கழகத்தின் வாயிலிலும் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் ஒரு மணி நேரக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

தமக்கு வழங்கப்பட்டு வருகின்ற கொடுப்பனவுகள் தற்போதைய அரசாங்கத்தின் வரவு – செலவுத் திட்டத்தில் குறைக்கப்பட்டுள்ளன எனவும், ஆளணிப் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படவில்லை எனவும் தெரிவித்து இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

கடந்த காலத்தில் தமக்கு வழங்கப்பட்டு வந்த சில கொடுப்பனவுகள் இம்முறை வரவு– செலவு திட்டத்தில் அதிரடியாக குறைக்கப்பட்டு இருக்கின்றன எனவும், சம்பள உயர்வு என்ற பெயரில் தமக்கான சம்பளம் குறைப்பு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர்கள் குற்றம்சாட்டி இருந்தனர்.

வவுனியா பல்கலைக்கழக வாயிலில் நண்பகல் சுமார் 12 மணிக்கு ஆரம்பமான கவனவீர்ப்புப் போராட்டம் ஒரு மணி வரை இடம்பெற்றது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு பதாதைகளையும் ஏந்தி இருந்தனர்.





# கிண்ணியா உப்பாறுப் பகுதியில் நேற்றையதினம்

# ஆயுதங்களைத் தேடி நிலம் அகழ்வு நடவடிக்கை

(எச்.எம்.ஹலால்தீன்)

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உப்பாறு பகுதியில் ஆயுதங்கள் புதைக்கப்பட்டுள்ளன எனக் கிடைத்த தகவலை அடுத்து, அவ்விடத்தை அகழும் பணி பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நேற்றுய் காலை 8.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்டது. எனினும் ஆயுதங்கள் எவையும் கண்டுபிடிக்கப்படவில்லை.

திருகோணமலை குற்ற விசாரணை புலனாய்வு பணியகப் பிரிவும், கொழும்பு குற்ற விசாரணைப் புலனாய்வு பிரிவும் இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டன.

நேற்று முன்தினம், திருகோணமலை குற்ற விசாரணைப் புலனாய்வுப் பணியகப் பிரிவு, கிண்ணியா பொலிஸ் ஊடாக, நீதிவான் நீதிமன்றத்தில், சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் நீதிவான் கே. ஜீவராணியினால் நிலத்தை அகழ்வதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த பகுதியே இது எனவும் தெரிய வருகின்றது.

இக்காலப் பகுதியில், பொது மக்களின் குடியிருப்பு பிரதேசமாக காணப்பட்டது. யுத்த சூழ்நிலை உக்கிரமடைந்த போது1990ஆம் ஆண்டு கடைசி பகுதியில் அங்கிருந்து மக்கள் வெளியேறினார்கள்.

மீண்டும் 2011 ஆம் ஆண்டு பொது மக்கள் இங்கு மீள்குடியேறினர். அன்றிலிருந்து இன்று வரை எவ்வித அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர் .

இந்த நிலையில் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பணியகப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களை அடுத்து, அவ்விடத்திற்கு நேற்று முன்தினம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் வருகை தந்து பலத்த பாதுகாப்பும் வழங்கப்பட்டது

இதன் பின்னரே நேற்றுய் அவ்விடத்தை அகழும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த நடவடிக்கையின் போது எவ்வித ஆயுதங்களும் அங்கு கண்டுபிடிக்கப்படவில்லை. தோண்டிய குழிகள் மீண்டும் மண் போட்டு மூடப்பட்டன.









# கருவி நிறுவனத்தில் பாரதிக்கு அஞ்சலி



(த.சுபேசன்)

கருவி நிறுவனத்தின் பொருளாளராகப் பணியாற்றி இயற்கையெய்திய ஊடகவியலாளர் பாரதி இராஜநாயகத்திற்கான அஞ்சலி நிகழ்வு, கருவி நிறுவனத்தினால் அண்மையில் நீர்வேலியில் அமைந்துள்ள கருவி நிறுவனத்தின் நிர்வாக அலுவலகத்தில் நடத்தப்பட்டது.

கருவி நிறுவனத்தின் தலைவர் க.சர்வானந்தா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வரவேற்புரையை நிறுவனத்தின் பணிப்பாளர்சபை உறுப்பினர் க.அன்பழகன் நிகழ்த்தினார்.

இதன்போது “ஊடகப் பரப்பில் பாரதி இராஜநாயகம்“ என்னும் தொனிப்பொருளில் அரசியல் ஆய்வாளர் மா.நிலாந்தனும், “சமூகப்பணித் தளத்தில் பாரதி இராஜநாயகம்“ என்னும் தொனிப்பொருளில் கருவி நிறுவனத்தின் ஸ்தாபகர் க.தர்மசேகரமும் உரையாற்றினர்.

“இதயக்கூட்டிலிருந்து இரு நிமிடங்கள்“ என்னும் மகுடத்தின் கீழ் பங்குபற்றுநர்களும் பாரதி இராஜநாயகமும் நினைவுகளைப் பகிர்ந்து கொண்டனர்.

தொடர்ந்து பாரதி இராஜநாயகத்தின் குடும்ப உறுப்பினர் தா.சுபேந்திரன் ஏற்புரையை நிகழ்த்தினார்.

கருவி நிறுவனத்தின் செயலாளர் நா.கீதாகிருஷ்ணனின் நன்றியுரையுடன் மௌனமொழி வீச்சு அஞ்சலி நிகழ்வு நிறைவு பெற்றது.

# சிவனடி பாத மலை வனப் பகுதியில் சட்ட விரோதமாக காட்டு மரங்களைத் தறித்த சகோதரர்கள் இருவர் கைது





சிவனடி பாத மலை தொடர் வனப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் மரங்கள் தரித்த சகோதரர்கள் இருவர் நேற்று நல்லதண்ணி வனத் துறை அதிகாரி ரத்நாயக்க மற்றும் அதிகாரிகளினால் சுற்றி வளைப்பின் போது கைது செய்யப்பட்டு உள்ளனர்.

தற்போது சிவனடி பாத மலை பருவ காலம் என்பதால் சிறு சிறு வர்த்தக நிலையங்கள் அமைக்க சட்ட விரோத மான முறையில் மரங்கள் தறித்த நல்லதண்ணி பகுதியில் உள்ள சுப்பிரமணியம் இந்திரன் (வயது 37), சுப்பிரமணியம் விஜயகுமார் (வயது 35) ஆகிய இரண்டு சந்தேக நபர்களை கைது செய்து ஹட்டன் நீதிமன்றத்தில் அவர்களை ஆஜர் படுத்த உள்ளனர் என நல்லதண்ணி வனத் துறை அதிகாரி ரத்நாயக்க தெரிவித்தார்.

# யாழ். ஆஸ்பத்திரி வைத்தியர்கள் பணிப்பகிஷ்கரிப்பை நிறுத்தினர்

## நிர்வாகத்துக்கு ஒரு வாரக் காலக்கெடு




யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் மட்டுப்படுத்தப்பட்டளவில் மேற்கொள்ளப்பட்ட பணிப்பகிஷ்கரிப்பை நேற்று மாலை முதல் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இடைநிறுத்தியுள்ளது.

வைத்தியசாலை நிர்வாகத்திற்கு ஒரு வார கால அவகாசம் வழங்கப்பட்டு தீர்வு எட்டப்படாவிடில் மீண்டும் பணிப்பகிஷ்கரிப்பை நடத்தவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினரால் திட்டமிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை நிர்வாகத்திடம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அவசர சிகிச்சை தவிர்ந்த ஏனைய சிகிச்சைகளை இடைநிறுத்தி அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் கடந்த வியாழக்கிழமை முதல் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்தனர்.


இந்நிலையில் அரச வைத்திய அதிகாரிகளின் தாய்ச் சங்கத்துடன் யாழ் போதனா வைத்தியசாலைக் கிளைச் சங்கம் கலந்துரையாடிய பின்னர், மட்டுப்படுத்தப்பட்ட அளவில் போராட்டத்தை தொடர்ந்தது.

இதன்போது அவசரமற்ற சத்திர சிகிச்சைகள் வைத்தியர்களால் மேற்கொள்ளப்படவில்லை.

தொடர்ச்சியான பேச்சுகளைத் தொடர்ந்து நேற்று மாலை முதல் ஒரு வார கால அவகாசம் வழங்கப்பட்டு பணிப்பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது.

விபத்து அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்தியர் மற்றும் தாதி உத்தியோகத்தர் இடையே ஏற்பட்ட முரண்பாட்டை யடுத்து நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டி வைத்தியர்களால் பணிப்பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டது.

பணிப்பகிஷ்கரிப்பு காலத்தில் ரத்து செய்யப்பட்டவர்களுக்கான சத்திர சிகிச்சைகள் விரைவாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் தெரிவித்தனர்.




# அரியாலையில் மனித எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்ட சித்துபாத்தி மயானத்திற்கு மேலதிகக் கண்காணிப்பு!

## நீதிமன்றத்தின் அனுமதியுடன் தீர்மானம்

யாழ்ப்பாணம் அரியாலை பகுதியில் உள்ள சித்துபாத்தி இந்து மயானத்தில் மனித எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்ட பகுதிக்கு பொலிஸ் பாதுகாப்புக்கு மேலதிகமான கண்காணிப்புப் பணிக்கு மயான அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் ஐவரை நியமிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் மீட்கப்பட்டமை தொடர்பான வழக்கினுடைய கலந்தாய்வு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் காணாமலாக்கப்பட்டோர் சார்பில் சட்டத்தரணி தற்பரனும் முறைப்பாட்டாளர் சார்பில் சட்டத்தரணி சுகாஷும், நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மயான அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்த எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்ட மயானத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு உரிய வகையில் வழங்கப்பட வேண்டும் என்றும், பொலிஸ் பாதுகாப்புக்கு மேலதிகமாக மயானத்தினுடைய அபிவிருத்தி சங்கத்தின் உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு பணியை மேற்பார்வை செய்வதற்கான அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றும் சட்டத்தரணிகளால் கோரப்பட்டது.

இதனை ஆராய்ந்த நீதவான் மயான அபிவிருத்தி சங்கத்தின் சார்பில் ஐந்து உறுப்பினர்களை பணியில் ஈடுபடுத்த அனுமதி வழங்கினார்.

வழக்கு தொடர் விசாரணைக்காக திகதியிடப்பட்டது.

# முன்னேஸ்வரத்தில் நேற்றுக் கொடியேற்றம்

**(உடப்பு க.மகாதேவன்)**

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாத சுவாமி ஆலயத்தின் வருடாந்த பிரமோற்சவத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை பஞ்சமி திதியும், அஷ்வினி நட்சத்திரமும் கூடிய நன்னாளில் காலை 9 மணிக்கு கொடியேற்றம் இடம் பெற்றது.

பின்னர் விஷேட பூஜைகள் நடைபெற்று, கொடித்தம்பத்திற்கு பாலாபிஷேகம் இடம்பெற்று, தூப தீபங்கள் காட்டப்பட்டது. இதன் போது நூற்றுக் கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு அம்பாளின் அருளைப் பெற்றுக் கொண்டனர்.













# தங்கச்சிமடத்தில் 5 ஆவது நாளாக மீனவர்கள் காத்திருப்பு போராட்டம்

இலங்கை சிறைகளில் அடைக்கப் பட்டுள்ள மீனவர்களையும், கைப்பற் றப்பட்ட படகுகளையும் விடுவிக்க வலியுறுத்திஇ இராமேஸ்வரம் விசைப் படகு மீனவர்கள் நேற்று ஐந்தாவது நாளாக காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை சிறைகளில் அடைக்கப் பட்டுள்ள மீனவர்களையும், கைப்பற் றப்பட்ட படகுகளையும் விடுவிக்க வலி யுறுத்தி இராமேஸ்வரம் மீனவர்கள் கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதியிலி ருந்து காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், பெப்ரவரி 28 ஆம் திகதியிலி ருந்து தங்கச்சிமடத்தில் இரவு, பகலாக காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று செவ்வாய்க் கிழமை 5 ஆவது நாள் போராட்டத்தில், இலங்கை கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்ட விசைப்படகு உரிமையா ளர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை 6 லட்சம் ரூபாவிலிருந்து 8 லட்சம் ரூபாவாக இலங்கை சிறையில் வாடும் மீனவ குடும்பங்களுக்கு வழங் கப்படும். தின உதவி தொகை 350 ரூபா என்பதை 500 ரூபாவாக உயர்த்தி வழங்கப்படும் என்ற தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்புக்கு மீனவர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

மேலும், மீனவர்கள் தங்கச்சிமடத் தில் தீக்குளிப்பு போராட்டம் நடைபெறும் என அறிவித்திருந்த நிலையில், தமி ழக அரசின் கோரிக்கையை ஏற்று தீக் குளிப்பு போராட்டத்தை மட்டும் ஒத்தி வைப்பதாக அறிவித்தனர். தங்கச்சிமடம் காத்திருப்பு போராட்ட பந்தலில் மத்திய அரசு மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வலியுறுத்தி மெழுகுவர்த்தி ஏந்தியவாறு மீனவர்கள் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

# பறவைக் காய்ச்சல் பாதிப்பால் 8,000 கோழிகள் உயிரிழப்பு



தெலுங்கானாவில் பறவை காய்ச் சலால் பாதிக்கப்பட்ட 8 ஆயிரம் கோழி கள் பரிதாபமாக உயிரிழந்துள்ளன. இதனால் மக்கள் பீதி அடைந்துள்ளனர்.

ஆந்திராவின் கிருஷ்ணா, கோதாவரி மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான பண்ணை கோழிகள் கடந்த மாதம் உயி ரிழந்தன. பறவை காய்ச்சலே இதற்கு காரணம் என ரத்தப் பரிசோதனையில் உறுதிசெய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து, அந்த மாவட்டங்களில் பண்ணை கோழி கள் விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, தமிழகம், கர்நாடகா, தெலுங்கானாவிலும் ஆந்திரா வின் கோழிகள் விற்பனை ஆக வில்லை. இதனால் கோழி வியாபாரத் தில் பெருத்த நஷ்டம் ஏற்பட்டது. தெலங் கானா மாநில எல்லைகளில் 24 இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைத்து ஆந்திர மாநில கோழிகளை தெலுங்கானாவுக்குள் அனுமதிக்காமல் தடுத்தனர். ஆனாலும், தெலுங்கானா மாநில எல்லையில் கம்மம் மாவட்டத் தில் கடந்த மாதம் பறவை காய்ச்சல் பரவியது.

இதைத் தொடர்ந்து, வாரங்கல், நல்கொண்டா, சூர்யாபேட்டை, மேதக் உள்ளிட்ட மாவட்டங்களில் பறவை காய்ச்சலால் பண்ணை கோழிகளின் உயிரிழப்பு அதிகரித்தது. இதனால், தெலுங்கானா மக்களும் கோழி இறைச்சி உண்பதை தவிர்த்தனர்.

இந்நிலையில், நேற்று சங்காரெட்டி, மேதக் மாவட்டங்களில் பறவை காய்ச்ச லால் பாதிக்கப்பட்ட 8 ஆயிரம் பண் ணைக் கோழிகள் பரிதாபமாக உயிரி ழந்தன. இதனால் மக்கள் பீதி அடைந் துள்ளனர். இப்பகுதிகளில் கோழிக்கறி விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இறந்த கோழிகளின் ரத்தம், பரிசோத னைக்கு அனுப்பப்பட்டுள்ளது.



# அமெரிக்காவில் பரவும் காட்டுத்தீ 4000 ஏக்கர் வனப்பகுதி தீக்கிரை

அமெரிக்காவின் வடக்கு கரோலினா மாகாணத்தில் கடந்த வாரம் ஏற்பட்ட காட்டுத்தீ, அருகில் உள்ள பகுதிகளுக்கும் பரவ ஆரம்பித்துள்ளதாக அந் நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

தீயைஅணைக்கும்பணியில்500க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த காட்டுத்தீயினால் சுமார் 4000 ஏக்கர் வனப்பகுதி தீக்கிரையானதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து பாதுகாப்பு கருதி 2000க்கும் மேற்பட்ட மக்கள் தமது குடியிருப்புக்களிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.





# காசா போர் நிறுத்தத்திற்கு தயாராகிறது இஸ்ரேல்!

காசா போர் நிறுத்தத்தின் இரண்டாம் கட்டத்துக்கு தயாராகவிருப்பதாக இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் கிடியோர் சார் தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் தடுத்து வைத்துள்ள 59 பணயக் கைதிகளில் பலரை விடுவிக்கத் தயாராக இருக்கும் வரையில் தங்களது தரப்பும் தயாராக இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா, எகிப்து மற்றும் கட்டார் ஆகிய நாடுகளின் மத்தியஸ்தத்துடன் ஏற்படுத்தப்பட்ட முதற்கட்ட போர் நிறுத்தம்கடந்தஜனவரி19ஆம்திகதிஅமுலுக்கு வந்தது.

இதன்கீழ்ஹமாஸ்தரப்பினரால்தடுத்து வைக்கப்பட்டிருந்த 38 பணயக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். 2,000 பாலஸ்தீனியர்களை இஸ்ரேல் விடுவித்தது.

எனினும், இந்த போர் நிறுத்தம் 42 நாள்களுடன் நிறைவுக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது.

# உக்ரைனுக்கு இதுவரை வழங்கி வந்த நிதி உதவிகளை நிறுத்தியது அமெரிக்கா



உக்ரைனுக்கு இதுவரை அளித்து வந்த நிதி உதவிகளை நிறுத்துவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

உக்ரைன் நேட்டோ கூட்டமைப்பில் சேருவதற்கு எதிர்ப்பு தெரிவித்த ரஷ்யா, அந்த நாடு மீது கடந்த 2022 ஆம் ஆண்டு போர் தொடுத்தது.

ரஷ்யாவின் தாக்குதலை சமாளிக்க முடியாமல் தவித்த உக்ரைனுக்கு ஆயுத உதவியை செய்ய முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் முன்வந்தார். அதன்பின்னர் ஆட்சி மாறியது.

முன்னாள் ஜனாதிபதி ஜோபைடன் கடைபிடித்து வந்த கொள்கையை அடியோடு மாற்றினார் ட்ரம்ப். ரஷ்யாவிடம் இழந்த பகுதிகளை மீட்டு தரமுடியாது, நேட்டோவில் யுக்ரைனுக்கு இடம் அளிக்க முடியாது என்று ட்ரம்ப் கூறி வருகிறார்.

வெள்ளை மாளிகையில் யுக்ரைன் ஜனாதிபதிக்கும் அமெரிக்க ஜனாதிபதிக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தினால் இந்த முடிவை எடுத்துள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# இன்றைய ராசி பலன்கள் - 05.03.2025




இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும். இன்றைய நாளை சிறப்பாக திட்டமிடவேண்டும்.அது உங்களுக்கு சிறந்த வழிகாட்டியாக அமையும்.

உங்கள் பணிகளை திறம்பட செய லாற்றுவீர்கள். அதே சமயத்தில் வேலையின் தொடக் கத்தில் சில தடைகளை எதிர்கொள்வீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. துணையிடம் அன்பான உரையாடல்களில் ஈடுபடலாம்.

உங்கள் தேவைகளுக்கு கடன் வாங்க நேரலாம். அதன் மூலம் உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

உங்கள் தோள்களில் வலி ஏற்படலாம். செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. முறையான உணவு முறை மேற்கொள்ளவும்.




இன்ற உங்கள்ஆற்றலையும் வலிமை யையும் உணரும் நாள்.இன்று உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாகச் செய்வீர்கள். நீங்கள் பணிகளை திறம்பட கையாண்டு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர் கள்.

இன்று இருவரும் மனம் பொருந்தி ஒற்றுமையுடன் கானாப்படுவீர்கள். உங்கள் காதலின் எதிர்காலத்தை பற்றி கலந்தாலோசிபீர்கள்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. நீங்கள் எதிர் பாராத வகையிலிருந்து பணம் கிடைக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். தியா னம் அல்லது யோகா மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.




இன்றைய நாள் சற்று மந்தமாக காணப்படும்.குழப்பங்களும் கவலை களும் நிறைந்திருக்கும்.இன்று சிறந்த பலன்கள் கிடைப்பதற்கு உகந்த நாள் அன்று.

இன்று பணியில் மும்மரமாக இருப் பீர்கள். பணி நிமித்தமான பயணம் இன்று காணப்படும். உங்கள் வேலைகளை திட்டமிடுவது இன்று முக்கியம்.

இன்று உணர்ச்சி வசப்படுவீர்கள். பாதுகாப்பின்மையை உணர்வீர்கள். உங்கள் உணர்ச்சிகளை கட்டுபடுத்த வேண்டும்.

நிதி நிலைமை நீங்கள் எதிர்பார்த்தது போலன்றி எதிர்மறையான பலன்களைத் தரும்.

உங்களிடம் காணப்படும் பதட்டம் காரணமாக உங்க ளுக்கு கால் வலி ஏற்படலாம்.




இன்றைய நாள் சாதகமான பலன் களை கொடுக்காது. விரும்பியவாறு பலன்களை அடைய சிறப்பாக திட்டமிட வேண்டும். இன்று அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும்.

உங்கள் பணிகளைக் கையாளும் போது கவனம் வேண்டும். வெற்றியை அடைவதற்கு திட்டமிடல் உதவும்.

உங்கள் துணையுடனான உறவில் சுமுகமான நிலை காணப்படாது. உங்களின் வேறுபட்ட நடவடிக்கைகள் உறவை பாதிக்கும்.

இன்று லாபம் நஷ்டம் இரண்டும் கலந்து காணப்படும். பணப் பரிவர்த்தனைகளுக்கான ஆவணங்களை முறையாக பராமரிக்க வேண்டும்.

கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளதால் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.




இன்று சாதகமான நாள். வெற்றி கரமான பலன்கள் கிடைக்கும். உங்க ளின் நம்பிக்கை இன்று பலிக்கும். திட்டமிட்டு செயலாற்றுவது இன்று நல்லது.

பணிகள் இறுக்கமாக காணப்பட்டா லும் குறித்த நேரத்திற்குள் பணிகளை முடிப்பீர்கள். உங்கள் பணிகளை நம்பிக்கையுடன் கையாள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். குடும்பத்தில் நடைபெறும் மங்களகரமான நிகழ்ச்சியில் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

பணப்புழக்கம் மிகுதியாகக் காணப்படும். ஆக்கபூர்வ மான காரியங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உங்களிடம் காணப்படும் நம்பிக்கை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று சாதகமான நாளாக அமை யாது. மனதை ஓய்வாகவும் அமைதி யாகவும் வைத்திருக்க வேண்டும். வளைந்து கொடுக்கும் அணுகுமுறை யும் புத்திசாலித்தனமும் தேவை.

பணியின் போது தவறு செய்ய வாய்ப்புள்ளது. கவனமாகப் பணியாற்றவும்.

உங்கள் துணையுடன் இன்று மோதல்கள் ஏற்பட லாம். தேவையற்ற விவாதங்கள் உண்டாக வாய்ப்புள்ளது. அதனை தவிர்த்தல் நலம்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை கையாளும் போது கவனமாக இருக்க வேண்டும்.

இன்று சிறிது பதற்றமாக காணப்படுவீர்கள். பாது காப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக் கும். பிரார்த்தனை மற்றும் மந்திர ஜபங்கள் உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.




இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக் காது. எதையும் லேசாக எடுத்துக் கொள் ளுங்கள். இன்று அமைதியாகவும் புத் துணர்ச்சியுடனும் இருக்க வேண்டும்.

பணிகளை பொறுமையான அணுகுமுறையோடு மேற்கொள்ள வேண்டும். பணிகள் பரபரப்பாக காணப்படும். உங்கள் பணிகளை திட்டமிடுவது அவசியம்.

நீங்கள் சிறிய விஷயங்களையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். உங் கள் குடும்பத் தேவைகளுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று நீங்கள் பதட்டமாக காணப்படுவீர்கள். தியா னம் மூலம் நீங்கள் அமைதி பெறலாம்.




எதிர் காலம் பற்றிய எண்ணங்களும் கனவுகளும் உங்கள் மனதில் நிறைந்து காணப்படும். இது அனைவரிடத்திலும் காணப்படும் பொதுவான விருப்பம். இன்று முக்கியமான முடிவுகள் எடுப்ப தற்கு சிறந்த நாள்.

பணியிடத்தில் உன்னதமான வளர்ச்சி காணப்படு கின்றது. உங்களுக்கு கிடைக்கும் அங்கீகாரம் உங்க ளுக்கு திருப்திகரமாக இருக்கும்.

பரிசுப் பொருள்களை பகிர்ந்து கொள்வதன் மூலம் உறவில் மகிழ்ச்சி நிலவும். உங்கள் துணை திருப்தி காண்பார்.

இன்று பணவரவு காணப்படும். உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவிற்கு உங்களிடம் தேவையான பணம் காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 05.03.2025




உங்கள் முன்னேற்றத்துக்கான திட்டங்களை வகுக்க வேண்டியது அவசியம். இன்று அதை பொறுப்புகள் காணப்படும். நீங்கள் எதிர்பார்க்கும் வெற்றி தாமதமாகும். பாடல்கள் கேட்ப தன் மூலம் ஆறுதல் அடையலாம்.

இருக்கும் வேலையை விட்டு வேறு வேலைக்கு போகும் எண்ணம் உண்டாகும். உங்களுக்கு திருப்தி அளிக்கும் ஒரு மாற்றத்தை இன்று நீங்கள் விரும்புவீர்கள்.

நீங்கள் எந்த விஷயத்தையும் தீவிரமாக எடுக்காமல் சகஜமாக எடுத்துக்கொள்ள வேண்டும். உங்கள் துணையை மகிழ்விக்க இந்த அனோகுமுறை தேவை.

இன்று தேவையற்ற செலவுகள் ஏற்படும். அதனைச் சுமையாக உணர்வீர்கள். பணத்தை திட்டமிட்டு தேவைகளுக்கேற்ப ஒதுக்கி செலவுகளை தவிர்த்திடுங்கள்.




உங்களின் ஆற்றலை நீங்கள் உணரும் நாள். இலக்குகளை நிர்ணயித்து அதை அடைவதற்கு முயன்றால் வெற்றி காணலாம். உங்கள் பணிகளை முன்னுரிமைப்படுத்தி அதன்படி ஆற்றுங்கள்.

நீங்கள் இன்று கடினமான உழைத்து உங்கள் மேலதிகாரிகளை உங்கள் பக்கம் ஈர்ப்பீர்கள். உங்கள் பணிகளை எளிதாக செய்வதற்கான திறமை இன்று உங்களிடம் காணப்படும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று வருவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிப்பீர்கள்.

உங்களிடம் போதிய அளவைவிட பணம் காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் அதிக ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




இன்று மன உளைச்சலுக்கு ஆளாவீர்கள். பாதுகாப்பற்ற உணர்வு அல்லது பதட்டத்தை தவிர்த்துவிடுங்கள். உங்கள் இலக்குகளை அடைவது இன்று கடினமாக இருக்கும்.

பணியிடத்தில் கூடுதல் பொறுப்புகள் காணப்படும். இது பதட்டத்தை உண்டாக்கும். முக்கியமான பணிகள் கூட நிலுவையில் காணப்படும்.

இன்று உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வு ஏற்பட அவரை அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படுகின்றது. பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் பணத்தை கவனமாகக் கையாளவும்.

ஆரோக்கியம் சிறந்து விளங்க அதிக அளவில் நீரைப் பருகவும். தலைவலி மற்றும் சில அசௌகரியங்கள் காணப்படும்.




இன்றைய நாளை சிறப்பானதாக ஆக்க நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும். உங்கள் உணர்சிகளை கட்டுப் படுத்த வேண்டும். தியானம் அல்லது யோகா போன்றவைகளில் ஈடுபடுவதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

இன்று பணிகளைக் கையாள்வது உங்களுக்கு கடினமாக காணப்படும். அதிகரித்து காணப்படும் பணிச்சுமை காரணமாக பணியில் தவறுகள் நேரலாம். எனவே கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் கலகலப்பாக இருக்க வேண்டும். அதன் மூலம் இன்று மகிழ்ச்சியும் திருப்தியும் கிடைக்கும்.

இன்று பணத்தை முறையாக பயன்படுத்த முடியாது. பணம் விரைவில் கரையும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

பதற்றம் காரணமாக இன்று நரம்பு தளர்ச்சிக்கு ஆளாகலாம்.

# சம்பூரில் சூரிய மின்சக்தி நிலையம் அமையும் இடத்தை நேரில் பார்வையிட்டார் ஆளுநர்



இலங்கை மின்சார சபை மற்றும் இந்திய நிறுவனம் ஒன்றின் ஒத்துழைப்புடன் மூதூர் பிரதேச செயலக பகுதிக்கு உட்பட்ட சம்பூரில் நிறுவப்படவுள்ள சூரிய மின் சக்தி நிலையத்தை நிர்மாணிப்பதற்கான முன்மொழியப்பட்ட இடத்தை கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர நேற்றுப் பார்வையிட்டார்.

இதன் போது மூதூர் பிரதேச செயலாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டமையுடன் இந்த இடங்களைப் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.